


# The Bible Standard

(Extra - Edition)

உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும். சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from the Booklet**

பொருளடக்கம்

## ஆத்துமா என்றால் என்ன?

**WHAT IS THE SOUL ?**

**BS Tamil Version - 10**

# ஆத்துமா என்றால் என்ன?

## What is the Soul?

**“அவர் அவர்கள் ஆத்துமாவை மரணத்துக்கு விலக்கிக் காக்கவில்லை” (சங். 78 : 50)**

சரீரம் சாகிறது என்பதும் அது தொடர்ச்சியாய் திரும்பத் திரும்பப் போஷிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது என்பதும், ஆகவே அது சாவாமையாகிய அழியாமையை உடையதாயிருக்க முடியாது என்பதும் யாவரும் அறிந்த விஷயங்களே. ஆனால் வேதவாக்கியங்கள் ஆத்துமாக்களைப் பற்றி அடிக்கடி தெரிவிக்கின்றன. ஆத்துமா அழிக்கப்படக் கூடாததாயிருக்குமா? ஓர் ஆத்துமாவை உண்டு பண்ணின தேவன் அதை அழிக்க முடியாதவராய் இருக்கலாமோ?

ஒவ்வொரு பிராணியின் ஜீவனும் சிருஷ்டிகரின் சித்தத்திற்குக் கீழ்ப்பட்டதாயிருக்கிறது என்று நம்மிலுள்ள நீதி நியாயமே நமக்குத் தெரிவிக்கிறது. ஆத்துமா சாவாமையாகிய அழியாமையுடையது என்று வேதபுத்தகம் போதிக்கிறது என சிலர் எண்ணுவது தப்பிதமாகும். வேத புத்தக மொழி பெயர்ப்பு களிலோ அல்லது பூர்வீக மூல பாஷை எழுத்துக்களிலோ ஆத்துமா சாகக்கூடாது என ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை என்பதை நாம் திட்டமாய் அறிவோமாக. ஆத்துமா சாகக்கூடாதது என்று வேதபுத்தகம் சொல்லாமல் “**தேவன் ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்கவல்லவர்**” என்றும், “**பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்**” என்றும் தெளிவாய்க் கூறுகிறது– மத். 10 : 28; எசேக். 18 : 4, 20.

சாகவும் அழிக்கப்படவும் கூடிய ஒன்று சாவாமையாகிய அழியாமையுடையதல்ல. ஆகவே ஆத்துமாக்களும் சரீரங்களும் சாவாமையாகிய அழியாமையுடையவைகள் அல்ல. அவைகள் சாகவும் அழிக்கப்படவும் கூடியவை என்பதே வேத உபதேசம் ஆகும்.

### ஆத்துமாக்களைப் பற்றிய தவறான கருத்துக்கள்

அப்படியானால், ஆத்துமா என்றால் என்ன? அது சொல்லிக்காட்ட முடியாததும் நம்மில் வாசஞ்செய்கிறதுமான ஏதோ ஒன்று என்பது ஆத்துமாவைக் குறித்துள்ள பொதுவான தப்பான அபிப்பிராயம் ஆகும். ஆனால் அது என்ன என்றும் எந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் விவரிக்க முயற்சி செய்கிறவர்கள் சிலரே. அறியப்படாத இந்த ஏதோ ஒன்று உண்மையில் புத்தி நுட்பமுள்ள ஆள் என்றும், சரீரமானது அதின் வாசஸ்தலமும் அது நடத்துகிற கருவியுமானது என்றும் அநேகர் தர்க்கிக்கிறது உண்டு. ஆத்துமா என்றால் என்ன? என்ற கேள்விக்கு மெதடிஸ்ட் பிஷப் ஒருவர் முன்ஒருதரம் கொடுத்த மறுமொழி யாதெனில், “அதற்கு உட்பக்கமுமில்லை, வெளிப்பக்கமும் இல்லை; சரீரமுமில்லை, உருவமுமில்லை, பங்கு பாகங்களுமில்லை; அவைகளில் இலட்சக்கணக் கானவற்றை ஒரு சிறு முட்டைக்கூட்டுக்குள் அடைத்து வைத்துக் கொள்ளக்கூடும்” என்பதே. இது, அப்படி ஒன்றுமேயில்லை என்பதற்கு இதுவே மிக நேர்த்தியான வியாக்கியானம் என்று நாம் சொல்லுகிறோம்.

சிலர் சொல்லுகிறது என்னவெனில் சரீரமானது ஆத்துமா அல்ல; ஏனெனில், தேவன் ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்கவல்லவர் என்ற நமது கர்த்தருடைய வார்த்தைகள் நிருபிக்கின்றன என்று கூறுகின்றனர். இப்போதும் மனுஷ கோட்பாடுகளினால் உண்டான தப்பெண்ணங்களை நமது மனதைவிட்டு அகற்றி மனுஷ சிருஷ்டிப்பை பற்றி வேதபுத்தகம் சொல்லுவதை ஆராய்வோ மானால் இவ்விஷயத்தைக் குறித்து நாம் திட்டமும் தீர்க்கமுமான அறிவை அடைவோம்.

### மானிட ஆத்துமா எவ்வாறு படைக்கப்பட்டது?

ஆதி. 2 : 7–ல், **தேவனாகிய கர்த்தர்** (யேகோவா) **மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை** (எபிரேய பாஷையில் ஜீவிகளுடைய சுவாசம் என்றே உள்ளது. பூமியின் மீதுள்ள சகல பிராணிகளும் சுவாசிக்கிற காற்றை) **அவன் நாசியிலே ஊதினார்.** (Heb. blew சுவாசம் ஆதாமின் சரீரத்துக்குள் பிரவேசிக்கும்படி செய்தார்). **மனுஷன் ஜீவாத்துமா வானான்** [ஞானேந்திரிய (அறிவுள்ள உணர்ச்சியுள்ள) ஜீவி ஆனான் ]” என்று நாம் வாசிக்கிறோம்.

இவ்வாக்கியத்தின்படி சரீரமானது முதலில் உண்டாக்கப் பட்டது. ஆனால் அது உயிருள்ளதாக ஆகும் மட்டும் ஓர் ஆத்துமாவாகவோ ஓர் ஆளாகவோ இருந்ததில்லை. அதற்குக் கண்கள் இருந்தும் காணவில்லை, காதுகளிலிருந்தும் கேட்கவில்லை, வாய் இருந்தும் பேசவில்லை, நாக்கு இருந்தும் ருசி பார்க்கவில்லை, மூக்கு இருந்தும் முகரவில்லை, இருதயமிருந்தும் நாடி துடிக்கவில்லை. இரத்தமிருந்தும் அது குளிர்ந்து ஜீவனற்றிருந்தது. சுவாச பைகளிருந்தும் அவை அசையவில்லை. ஆகவே சரீரமானது மனுஷனாயிராமல் ஜீவனில்லாத சரீரமாய் அதாவது ஒரு பிரேதத்துக்கு ஒப்பானதாய் இருந்தது.

மனுஷ சிருஷ்டிப்பில் இரண்டாவதாக நடப்பிக்க வேண்டிய விஷயம், தகுதியான பிரகாரமாய் உருவாக்கப்பட்டு பூரணமாய் பக்குவப்படுத்தப்பட்ட சரீரத்துக்கு உயிர்கொடுப்பதே ஆகும். இச்செய்கை ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் என்ற வார்த்தைகளில் அடங்கியிருக்கிறது. சுகமுள்ள ஒரு ஆள் தண்ணீரில் மூழ்கி உயிர் நீங்கின பின்பு கைகளைத் தூக்கித் தூக்கி மேலும் கீழும் இருபுறமும் மாறி மாறி ஆட்டி அசைக்க

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

சுவாசப் பைகள் துருத்திகள் போல் வேலை செய்து படிப்படியாய் நாசியிலே சுவாசமுண்டாகி அந்த மனுஷனுக்குத் திரும்ப உயிர் உண்டாகி பிழைத்துக் கொள்கிறான் என்று நாம் அறிகிறோம். ஆதாமின் விஷயத்தில் சிருஷ்டிகர் உண்டுபண்ணின பரிபூரணமான சரீரத்தை ஆகாயத்திலுள்ள (காற்றிலுள்ள) ஜீவனுக்கு ஆதாரமான பிராண வாயுவை சுவாசிக்கச் செய்வதற்கு அவர் அவ்வளவு கஷ்டமான பிரயாசை எடுக்க வேண்டியது இருந்திருக்காது.

ஜீவனுக்கு ஆதாரமான சுவாசம் உட்பிரவேசித்ததும் சுவாசப் பைகள் விரிந்து இரத்த அணுக்கள் பிராண வாயுவை அடைந்து இருதயத்திற்குள் சென்றன. அது முறையே சரீரத்தின் ஒவ்வொரு பாகத்துக்கும் அவைகளைப் போகும்படி செய்து, முன்பே உண்டாக்கப்பட்டு அசைவற்றிருந்த நரம்புகளெல்லாம் கிரியை செய்ய ஆரம்பித்து உணர்ச்சியையும் ஊக்கத்தையும் அடைந்தன. இச்சக்தி அதாவது இந்த உணர்ச்சியும் ஊக்கமும் உடனடியாக மூளைக்குத் தாவி விடவே எண்ணம், அறிவு, யூகம், பார்வை, கேட்கும் தன்மை, மோப்பம், உணர்வு, சுவை முதலியவைகளெல்லாம் ஆரம்பித்து விட்டன. ஜீவனற்ற மனுஷ சரீரமானது ஞானேந்திரிய (அறிவுள்ள) ஜீவியாகிய ஒரு மனுஷனாகி விட்டது. இவ்விதமாக ஆதி. 2 : 7–ல் சொல்லப்பட்ட நிலைமை வந்தெட்டிவிட்டது. வேறு வகையாகச் சொல்ல வேண்டுமானால், ஜீவத்துமா என்ற வாசகம் ஞானேந்திரிய (அறிவுள்ள, உணர்ச்சியுள்ள ஜீவி) அதாவது உணர்ச்சி அறிவு எண்ணம் முதலியவைகளுள்ள ஒரு ஆள் என்ற சரியான கருத்தைக் கொடுக்கிறது.

மேலும் ஆதாம் பூரண சரீரக் கட்டுடையவனாய் இருந்தாலும் அதாவது ஆத்துமாவாகிய புலனறிவுள்ள ஜீவியை (sentient being) நிலைக்கச் செய்ய அவன் ஜீவ விருட்சங்களின் கனிகளைப் புசிக்க வேண்டியது அவசியமாயிருந்தது. அவன் பாவஞ் செய்த பொழுது **அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சங்களின்** (மூல பாஷையாகிய எபிரேய பாஷையில் விருட்சங்கள் என்றே உள்ளது) **கனிகளையும் பறித்து தொடர்ச்சியாய் புசித்து என்றென்றைக்கும் உயிரோடிராதப் படிக்குச் செய்ய வேண்டுமென்று (ஆதி. 3 : 22) தேவன் அவனை ஏதேனிலிருந்து துரத்தி விட்டார்.** தேவனுடைய வசனத்திலிருந்து பிரகாசிக்கிற சத்தியமாகிய வெளிச்சத்திற்கு முன் அசத்தியமும் பொய்யுமாகிய அந்தகாரம் நிலை நிற்காமல் சிதறடிக்கப்படும் வகையைக் கவனியுங்கள்!

## தாழ்ந்த விலங்குகளும் ஆத்துமாக்களே

மேலும் மற்ற ஜீவ பிராணிகளும் வேத புத்தகத்தில் ஆத்துமாக்கள் என்றே அழைக்கப்படுகின்றன. அவைகளும் அறிவுள்ள பிராணிகளே ஆயினும் மனுஷனுக்குக் குறைந்த படியாயுள்ள அறிவுள்ள பிராணிகளாகும். அவைகளுக்கும் மனுஷனைப் போல ஐம்புலன்களுண்டு; அவைகளும் பார்க்கவும் கேட்கவும் தொடும் உணர்வும், ருசிக்கவும் முகரவும் கூடும்; அவை ஒவ்வொன்றும் தன் தன் சரீரக்கட்டின் அளவுக்கேற்ப யூகித்தறியவும் கூடும். என்றாலும் மனுஷனைப் போல ஆழ்ந்த சிந்தனையோடும் கருத்தோடும் அவைகள் யூகித்தறிய முடியாது. இந்த வித்தியாசம் மற்ற ஜீவ பிராணிகளுக்கு இருக்கிற ஜீவனைப் பார்க்கிலும் வித்தியாசமான ஓர் ஜீவன் மனுஷனுக்கு உண்டு என்பதினால் அல்ல; ஏனென்றால் மனுஷன் உட்பட எல்லா ஜீவபிராணிகளுமே, ஒரே ஜீவ ஊற்றாகிய சிருஷ்டிகரிடமிருந்தே ஒரேவித ஜீவசக்தியைப் பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் தன்தன் இனத்திற்குத் தகுந்தபடி, இரத்தம் மாம்சம் எலும்பு முதலியவைகளை உண்டு பண்ணக்கூடிய ஒரேவித ஆகாரங் களை உண்டு ஒரேவிதமாகவே எல்லா ஜீவ பிராணிகளும் ஜீவனைத் தங்களில் நிலைக்கச் செய்துகொள்கின்றன. ஒவ்வொன்றும் ஆதியில் தேவனிடமிருந்து பெற்ற ஜீவனையே தன் சந்ததிக்குக் கொடுத்து, தன் தன் இனத்தை ஒரேவிதமாகவே ஜெனிப்பிக்கின்றன; ஆனால் அவைகள் உருவத்திலும் மனம் சம்பந்தமான சக்தியிலும் வித்தியாசப்படுகின்றன. மனுஷன் ஒரு ஆத்துமாவாக (புத்தி சித்தமுள்ள பிராணியாக) இருக்கிறபடியால், மிருகங்களுக்கு இந்த ஆத்தும தன்மை (அறிவு, எண்ணம், உணர்ச்சி) இல்லை யென்று சொல்லக்கூடாது. மனுஷனும் மிருகமும் ஆத்தும இலட்சணமுடையவைகள். அதாவது மனுஷனும் மிருகமும் புத்தி சித்தமும் உணர்ச்சியுமுள்ள பிராணிகள். இதுவேதபோதனையாக மாத்திரமல்லாமல், ஆத்துமா என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை மேலே காட்டியபடி கிரகித்துக் கொண்டால் இது சத்தியமென்று உடனே அறிந்து கொள்ளக்கூடியதாகும். இதைப் பின்வருமாறு விளக்கிக் காட்டுவோம்:

ஓர் பூரணமான நாய் சிருஷ்டிக்கப்படுவதாகவும் அது ஆதாமுடைய சிருஷ்டியைப்போல் விசேஷித்து வருணிக்கப் படுவதாகவும் வைத்துக்கொள்வோம். அந்த வருணனயில் என்ன வித்தியாசம் காணப்படும்? ஒரு வித்தியாசமுமிராது. ஊக்கமும் உற்சாகமுமுடைய ஜீவசுவாசமானது ஓர் நாயின் சரீரத்திற்குள் செலுத்தப்படும் வரைக்கும், அச்சரீரமானது ஓர் நாயாயிருக்க முடியாது. ஆதாம் ஜீவனைப் பெற்றதும் தனக்குரிய எல்லாவித அறிவுகளோடும் சக்திகளோடும் ஜீவபிராணி ஆனது போல், நாயும் தனக்குரிய அறிவுகளோடும் ஓர் ஜீவ பிராணி ஆனது. ஆதாம் மாம்ச பிராணிகளுக்குள்ளே மகா உயர்வான நிலைமைக்குரிய ஜீவ ஆத்துமா; நாயோ ஓர் தாழ்வான நிலைமைக்குரிய ஜீவ ஆத்துமா. ஆகவே மகா உயர்வான நிலைமைக்குரிய ஜீவ ஆத்துமாவே மனுஷன் என்பது வெளிப்படையான (ஆட்சேபிக்கக்கூடாத) சத்தியமாகிறது.

## மனிதனுடைய மேலான உடலமைப்பு

மனுஷனுக்கும் மிருகத்துக்கும் உள்ள பெரிய வித்தியாசம் இரண்டையும் கிரியை செய்யப்பண்ணுகிற ஜீவனிலும், இரண்டுக்கும் உரிய ஆத்ம சக்தியின் ஏற்றத் தாழ்விலும் இருக்கிறதென்று சொல்லமுடியாதானால், வித்தியாசம் அவைகளுடைய சரீரங்களில் இருக்கக்கூடிய தாகுமோ? ஆம், மெய்யாகவே அப்படியேதான். இயல்பான வித்தியாசம் சரீரப்பிரகாரமானதே ஆகும். அதாவது சரீர அமைப்பு வகையிலுள்ளது அதோடு தேவனும் தமது வாக்குத்தத்தங்களில் வெளியிட்டிருக்கிறபடி மனுஷனுடைய பிற்கால ஜீவியத்திற்காக ஓர் ஏற்பாடு உண்டு பண்ணியிருக்கிறார். மிருகங்களுக்கோ அப்படிப்பட்ட பிற்கால ஜீவியத்திற்கான ஒழுங்கு எதுவும் தேவனால் ஏற்படுத்தப்படவுமில்லை; அவை மானத சாஸ்திரத்தைக் கிரகித்தறிந்து கொள்ளத் தகுதியான உறுப்போடு அமைக்கப்படவுமில்லை. மூளையின் அளவும் எடையும் சாமர்த்தியத்தையும், புத்திக்கூர்மையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இவ்விஷயத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷனை எவ்வளவோ மேலான வகையாய் வரப்பிரசாதமுள்ளவனாக்கியிருக்கிறார். மிருகமானது மனுஷனைப் பார்க்கிலும் மிகக் குறைந்த மூளையுடையது. அதின் மூளையானது கொஞ்சங்குறைய முற்றிலும் தன்னயம் பார்க்கிற குணத்திற்குரியதாயிருக்கிறது. நியாயம், அநியாயம் ஆகிய இவற்றை கிரகித்தறியக்கூடிய சக்தி அதன் எஜமானாகிய

மனுஷனின் சித்தத்தைப் பொறுத் திருக்கிறது. நல்லறிவும் சன் மார்க்கமுமாகிய நீதி நெறிகளிலும் இயற்கையிலும் விளங்கும் மாட்சிமைகளை அது கிரகித்தறிந்து உணர முடியாது; சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் அவ்வித மூளைச் சக்தியை அதற்குக் கொடுக்க வில்லை.

ஆனால் மனுஷன் பாவத்திற்குள்ளும் மரணத்துக் குள்ளும் பிரவேசித்து விட்டதினிமித்தம், மகாபிரதான நியாயாதிபதியாகிய சிருஷ்டிகர் மிகவும் நல்லது என்று சொன்ன பொழுது இருந்த ஆதியான பரிபூரண நிலைமையை, அவன் இழந்துவிட்டதால் அவனுடைய நிலைமை தாழ்வடைந்து போனது; ஆகவே அறிவுப் பயிற்சி ஆகிய மனோவிருத்திக்குரிய தாழ்வான உறுப்புக்களை சிலர் பண்படுத்தி அறிவுக்கடுத்த உயர்வான மனோ சக்திகளை அப்பியாசிக்கக் (உபயோகிக்க) கூடாமற்போனதுமன்றி, இந்த உயர்வான மனோசக்திகளை வெளிப்படுத்துகிற மூளை சம்பந்தமான உறுப்புக்களை சிற்றுருவமடையச் செய்துவிட்டனர் (அதாவது கிரியை நடப்பிக்க முடியாமல் பாவத்தினால் அந்த உறுப்புக்கள் தேய்ந்து மழுங்கிப்போய்விட்டன); என்றாலும் அவ்வுறுப்புக்கள் இன்னும் அவ்விடத்திலேயே இருக்கின்றன; அவைகள் விருத்தி செய்யப்படுவதற்குத் தகுந்தவையாயும் இருக்கின்றன. ஆனால் மிருக சிருஷ்டிப்பு சம்பந்தமாக அதின் உயர்வான (அதி பூரணமாக) வற்றைக் கவனித்தாலும் மேற்கூறிய விஷயம் அவைகளுக்குப் பொருந்தாது.

அப்படியானால் சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் மிருகத்துக்கு வித்தியாசமாகவே மனிதனை உண்டாக்கியிருக் கிறார் என்பது அவர் அவனுக்கு அளித்திருக்கிற மகா உன்னதமும் மேன்மையுமான சரீரக் கட்டில் அமைந்துள்ளதென்று விளங்குகிறது: மனுஷனும் மிருகமும் ஒரே விதமான காற்றைச் சுவாசித்து, ஒரே தண்ணீரைக் குடித்து ஒரே விதமான ஆகாரத்தைப் புசித்து ஒரே விதமான மாம்சமும் எலும்பும் உடையவர்களாயிருந்து புத்தி நுட்பமுள்ள ஆத்துமாக்களாய் இருக்கிறார்கள். ஆனால் மனுஷனோ விசேஷித்த சரீர அமைப்பு உள்ளவனாய், விசேஷித்த யுக்தி அறிவுக்குரிய சாமர்த்திய முடையவனாய் இருக்கிறதோடு மிருகத்திற்கு வித்தியாச மானவனாய் முற்றிலும் வேறான ஓர் உன்னதமான நிலையிலுள்ளவனாக சிருஷ்டிகர்த்தாவாகிய தேவனால் நடத்தப்படுகிறான். அவன் தனது சிருஷ்டிகரின் சாயலாக (குண சாயலில் – பூரண மனுஷனுக்குரிய அளவில் பூரண நீதியும் அன்பும் ஞானமும் வல்லமையுள்ளவனாக) உண்டாக்கப்பட்டான். அவனுடைய ஆதிச்சாயலில் இருந்து பாவமானது அவனை எந்த அளவிற்கு தாழ்வடையச் செய்கிறதோ அந்த அளவிற்கு அவன் மிருகத்தனமுள்ளவன் என மதிக்கப்படுகிறான். உயர்ந்ததும் மேலானதுமாகிய அறிவுகளுக்கு வழி இல்லாதவனாய் மிருகங்கள் போலாகிறான்.

## வேத அத்தாட்சி

இதற்கு வேத சாட்சியும் ஒத்திருக்கிறது. (எபிரேய ஆதியாகமத்தில் ஆத்துமா என்ற அர்த்தத்தையுடைய நேபேஷ் (Nephesh)என்ற எபிரேய பதம் 9 வாக்கியங்களில் தாழ்வான பிராணிகளின் சம்பந்தமாய் உபயோகிக்கப்பட்டிருக்கிறது; அவை ஜீவாத்துமாக்கள் என அழைக்கப்படுகின்றன (ஆதி. 1 : 20, 21, 24, 30; 2 : 19, 9, 3, 4, 10, 12) எண். 31 : 28–ல் பிராணி என்ற பதம் மூல பாஷையின்படி ஆத்துமா என்று வாசிக்கப் படவேண்டும் (இங்கிலீஷ் பைபிள் காண்க). ஆகவே வேத புத்தகத்தில் தாழ்வான பிராணிகளும் ஆத்துமாக்கள் என அழைக்கப்படுகின்றன.

மனுஷனிலுள்ள ஜீவனைப்பற்றிய நியமத்துக்கும், மீன்வர்க்கம் நீங்கலாக நாசியின் வழியாய் சுவாசிக்கிற மற்றெல்லா ஜீவ பிராணிகளிலுமுள்ள ஜீவனைப்பற்றிய நியமத்துக்கும் யாதொரு வித்தியாசமுமில்லையென்ற போதனை ஜலப்பிரளயத்தினாலுண்டான அழிவைப் பற்றிய சரித்திரத்தில் போதிக்கப்படுகிறது (ஆதி. 6; 7 : 7; 15 : 22) மனுஷர்களுக்கும் மிருகங்களுக்கும் "ஒரேவிதமான சுவாசம்" (Hebrew - "ruach" - spirit of life) அதாவது ஒரே விதமான ஜீவன் உண்டு என்றும், மிருகங்கள் சாகிறது போலவே மனுஷர்களும் சாகிறார்கள் என்றும் சாலொமோன் இராஜா சொல்லும் வார்த்தைகள் (பிர. 3 : 19) இதற்கு முழுவதும் ஒத்திருக்கிறது. "**உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும் தாழ பூமியிறங்கும் மிருகங் களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?**" என்று அவர் கேள்வி கேட்டு (பிர. 3 : 21) புறமதஸ்தரின் கொள்கையை ஆட்சேபித்துப் பேசுகிறார். "மனுஷன் சாகிறதுபோல தோன்றுகிறானேயன்றி உண்மையில் அவன் சாகிறதில்லையென்றும் அவனுக்குள் சாகா வஸ்து ஒன்றிருக்கிறதென்றும்" அக்காலத்தில் புறமதஸ்தர் எண்ணி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட விஷயத்துக்கு ஏதாவது ஆதாரம் எதாவது மெய்யறிவு உண்டானால் தம்மோடு விவகாரம் நடத்தும்படி சாலோமோன் ஞானி அழைக்கிறார். பிர. 3: 19, 20–ம் வாக்கியங்களில் இவ்விஷயத்தைப் பற்றியுள்ள சத்தியத்தை (உண்மையை) அவர் விளக்கிக்காட்டின பின்பு 21–ம் வாக்கியத்திலுள்ள கேள்வியைக் கேட்டு அதிலுள்ள விஷயத் திற்குத் தகுந்த ஆதாரங்கள் கொடுக்கவோ அல்லது அவர்களிடத்தில் அப்படிப்பட்ட மெய்யறிவு இல்லையென்று ஒப்புக்கொள்ளவோ அவர் அக்கொள்கை உடையவர்களை அழைக்கிறார்.

## மனுஷனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாடு

மனுஷனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வித்தியாசம் அவர்களுக்குள்ள ஜீவனிலும் சுவாசத்திலும் இராமல், மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷனுக்கு உள்ள விசேஷித்த சரீர அமைப்பிலேயே இருக்கிறது. அதாவது, மாம்ச சரீர அமைப்பை உடையவராயிராமல் அதிலும் மேலான விசேஷித்த ஆவிக்குரிய சரீர அமைப்புடையவராயிருக்கிற நமது சிருஷ்டிகர்த்தா என்னும் தேவனுக்கு உரியவைகளான நீதி, அன்பு, ஞானம், வல்லமை முதலிய மனம் மற்றும் சன்மார்க்கத் தத்துவங்களும் இலட்சணங்களும் உடையவனாயிருக்கக்கூடிய சரீர அமைப்பை பெற்றவனாயிருக்கிறான். நாம் முன்பே காட்டியிருக்கிறபடி பிற்கால ஜீவியத்தின் மேல் மனுஷனுக்கிருக்கும் நம்பிக்கை, அவனுடைய ஜென்ம இயற்கையான சக்திகளைப் பொறுத் ததாயிராமல் அந்த நம்பிக்கைக்குரிய ஆதாரம், மனுஷனாகிய ஒவ்வொரு ஆத்துமாவையும் மரணத்திலிருந்து மீட்கும்படி மகாபெரிய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவால் செய்து முடிக்கப்பட்ட இரட்சண்ய வேலையை மூலாதாரமாகக் கொண்ட தேவனுடைய கிருபை பொருந்திய ஏற்பாட்டின் மேலும் அந்த ஏற்பாட்டின் பயனாகப் புது உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உயிர்த்தெழுதலின் மூலமாய் விருப்பமுள்ளவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாகத் தேவன் ஏற்படுத் தியிருக்கிற ஏற்பாட்டின் மேலும் நிலை நிற்கிறது.

நமது மீட்பர் "**தம்முடைய ஆத்துமாவை** (தம்மைத் தாமே) **மரணத்தில் ஊற்றினார்**". "**தம்முடைய ஆத்துமாவை** (தம்மைத்தாமே)

**குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்**'' (ஏசா. 53 : 10, 12). தமது ஆத்துமாவைக் குற்ற நிவாரணபலியாக ஒப்புக்கொடுத்து ஆதாமின் ஆத்துமாவை அதாவது ஆதாமையே (ஆதாமையும் அவனில் இருந்த முழு மனுஷ ஜாதியையும்) தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கிரயத்துக்கு வாங்கினார்; ஆதலால் ஆத்துமாக்கள் மீட்கப்பட்டன; ஆத்துமாக்களே உயிரோடெழுப்பப்பட வேண்டியவைகளாயிருக்கின்றன. அப். 2 : 24-32; சங். 16 : 10; 30 : 3; 49 : 15; 89 : 48.

## அதே சரீரங்களே மறுபடியும் கொடுக்கப்படுகின்றனவா?

மரித்து அடக்கம் பண்ணப்பட்ட அதே சரீரங்கள், ஒரு அணுக்கூட மாறாமல் திரும்பவும் உயிரடையும் என்று அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் இதற்கு மாறாக வேதப்புத்தகம் சொல்லுகிறது; ''**நீ** (மரணத்தில்) ***விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை*** (சரீரத்தை) ***விதைக்கிறதில்லை*** உயிர்த்தெழுதலில் தேவன் ஒவ்வொரு ஆளுக்கும் (ஒவ்வொரு ஆத்துமாவுக்கும்) அவருடைய அளவற்ற ஞானத்திற்கேற்றபடி ஓர் சரீரத்தைக் கொடுப்பார். இந்த சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவாட்டியாகிய சபைக்கு ஆவிக்குரிய சரீரங்களையும், ஆயிர வருஷ யுகநாளில் சீர்திருத்தப்படும் மனுக்குலத்துக்கு மானிட சரீரங்களையும் தேவன் கொடுப்பார். ஆனால் மரணத்தில் இழந்துபோன அதே சரீரங்களையல்ல என்பதைத் திட்டமாய் அறிவோமாக. 1கொரி. 15 : 37, 38.

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபொழுது ஓர் சரீரத்தோடு ஜீவசுவாசம் சேர்க்கப்பட்டதின் பலனாக ஞானேந்திரிய (உணர்ச்சி அறிவு உள்ள) ஜீவியாகிய ஆத்துமா உண்டானபடியால், ஏதேனும் காரணத்தினால் இவை இரண்டும் (சரீரமும் ஜீவ சுவாசமும்) வெவ்வேறாகப் பிரிக்கப்படுமாயின், எல்லாவிதமான அறிவும் நினைவும் உணர்ச்சிகளும் ஒழிந்து, ஞானேந்திரிய ஜீவியாகிய ஆத்துமாவுக்கு அழிவு வரும்; ஆத்துமா (ஞானேந்திரிய ஜீவியாகிய புத்தி சித்தமுள்ள ஆள்) அழிந்து போகிறது. இவ்விதமாக சரீரமானது தான் முன்னிருந்த மண்ணுக்குத் திரும்புகிறது; ஆவியாகிய ஜீவசுவாசமோ ஆதாமுக்கும் அவன் மூலமாய் அவன் சந்ததிக்கும் தன்னைக் கொடுத்த தேவனிடத்திற்குத் திரும்புகிறது (பிர. 12 : 7). அது மனுஷ சிருஷ்டிப்புக்கு முன்னிருந்தது போல, மனுஷனின் அதிகாரத் திற்குள் இனி கட்டுப்பட்டிருக்கவில்லை என்ற கருத்தில் அது தேவனிடத்திற்குத் திரும்புகிறது. தேவ வல்லமையினால் அன்றி வேறு எவ்விதத்தினாலும் அது திரும்பவும் முன்போல சரீரத்தோடு சேர்ந்து ஒருக்காலும் ஓர் ஆத்துமாவாக (ஓர் ஆளாக) முடியாது. இச்சத்தியத்தை அறிந்தே, தேவனுடைய ஜனங்கள் உயிர்த் தெழுதலின் மூலமாய் தங்களுக்குள்ள பிற்கால ஜீவியத்தின் மேலுள்ள தங்கள் நம்பிக்கையைத் தேவனிடத்திலும் அவரால் மகிமைபடுத்தப்பட்டு உயர்த்தப்பட்டிருக்கிற அவரது ஸ்தானாப தியாகிய கிறிஸ்துவினிடத்திலும் ஒப்புவிக்கிறார்கள் (லூக். 23:49; அப். 7 : 59). கிறிஸ்துவின் ஈடுபலியினாலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலினாலும் மனுஷனின் பிற்கால ஜீவியத்திற்கு தேவன் இடம் பண்ணாதிருப் பாராயின் மனுக்குலத்துக்குரிய எல்லா நம்பிக்கைகளும் மரணத்தோடே முடிந்துபோகும் (1 கொரி. 15 : 14-18).

## மனுஷன் மறுபடியும் உயிரடைவான்

ஆனால் நாம் மறுபடியும் உயிரோடே வாசம் பண்ணுவதற்கு தேவன் இவ்விதமாக ஏற்பாடு பண்ணி யிருக்கிறார். அவர் தமது கிருபை பொருந்திய ஏற்பாட்டை வெளிப்படுத்தினது முதல் இவ்விஷயத்தைப் பற்றி யுக்தி அறிவோடு எழுதினவர்களும் பேசினவர்களும் (அதாவது தேவ ஆவியினால் ஏவப்பட்டு வேதபுத்தகத்தை எழுதினவர்கள்) ஏக மனதாய் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலின் காலைக்கும் நடுவிலுள்ள காலமானது மரித்தோர் உணர்ச்சியற்றிருக்கும் காலமென்று சொல்லுகிறார்கள். அக்காலத்தில் மரித்தோர் ஞானேந்திரிய ஜீவிகளாகிய ஜீவாத்துமாக்களாக இராமலிருந் தாலும், அவர்களுடைய உயிர்த்தெழுதலின் நிச்சயத்தின் பொருட்டு அவர்கள் நித்திரை செய்கிறவர்களாகச் சொல்லப் படுகிறார்கள். மெய்யாகவே இந்த ஒப்பனை மிகச் சிறந்தது; ஏனென்றால் மரித்தோர் இக்காலத்தில் முற்றிலும் உணர்ச்சி யற்றவர்களாய் இருக்கிறார்கள்; அவர்கள் மரணத்தின் மூலமாய் அழிவடைந்த நிமிஷம் முதல் திரும்பவும் உயிரடையும் நிமிஷம் வரையுள்ள கால அளவையோ அக்காலத்தில் நடைபெறும் சம்பவங்களையோ கொஞ்சமும் உணரவும் அறியவுங்கூடாத நிலைமையை அடைந்திருக்கிறார்கள்; அவர்கள் உயிரோ டெழும்பும் நிமிஷமானது அவர்கள் மரணமடைந்த நிமிஷத்துக்கு அடுத்த நிமிஷம்போல் அவர்களுக்குப் புலப்படும்.

உதாரணமாக லாசருவின் மரணத்தைக் கவனிப்போம். லாசருவின் மரணத்தைக் குறித்துப் பேசுகையில் நமது கர்த்தர் ''***நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான். நான் அவனை எழுப்பப்போகிறேன்***'' என்றார். அவருடைய சீஷர்கள் அவ்வார்த்தையை அறியாமற் போனதினிமித்தம் அவர் ''**லாசரு மரித்துப் போனான்**'' என்று திரும்ப வெளிப்படையாகச் சொன்னார் (யோ. 11 : 11, 14) மரணத்திற்குப் பின் மரித்தோர் தன்னறிவோ டிருக்கிறார்கள் என்னும் கொள்கை உண்மையாய் இருக்கு மானால், லாசரு தான் மரித்திருந்த நான்கு நாட்களிலும் தான் அடைந்த அனுபவத்தைப் பற்றி யாதொன்றும் சொல்லாதது கவனிக்கத் தகுந்ததல்லவா. வேதனை நிறைந்த நரகம் என்ற ஓர் இடத்தில் அந்த நான்கு நாட்களும் அவன் இருந்தான் என ஒருவரும் சொல்லத் துணியார்கள்; ஏனென்றால் நமது கர்த்தர் அவனை ''***தம்முடைய சிநேகிதன்***'' என்று சொல்லுகிறார் அவன் பரலோக ஆசீர்வாதத்தை அடைந்து கொள்ளப் போயிருந்தால் நமது கர்த்தர் அவனை அவ்விடமிருந்து வரும்படியாக கூப்பிடமாட்டார்; ஏனென்றால் அப்படிச்செய்வது ஓர் துரோகி செய்கிற செய்கையாய் இருக்கும். ஆனால் நமது கர்த்தர் சொன்னபடி லாசரு நித்திரை செய்தான். அவன் ஜீவனை அடைந்து தன்னறிவுள்ளவனாகும்படி அவர் அவனை எழுப்பினார். அவன் ஞானேந்திரிய ஜீவி அதாவது உணர்ச்சி யுள்ள ஓர் ஆள் ஆகிய ஆத்துமா ஆனான். இதெல்லாம் லாசருவினாலும் அவனுடைய சிநேகிதராலும் மிகப்பெரியதாய்க் கொண்டாடப்பட்ட பிரத்தியட்சமான ஓர் தயவாக இருந்தன.

## மரித்தோர் நித்திரை செய்கிறார்கள்

மரணமடைவதும் (செத்துக்கொண்டே போகிறதும்) மற்றும் நித்திரை செய்வதும் (மரண நிலைமை) நடக்கிற

இராக்காலத்தில் இருக்கிறோமென்ற கருத்தை அநேக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன; இந்த இராக்காலம் விழித்தெழும்புதலும் பூரண உயிரடைதலும் நடைபெறும் அதிகாலையுடன் ஒப்பிடப்படுகிறது. ''**சாயங்காலத்திலே** (ஓர் இரவு மட்டும்) **அழுகை தங்கும்: விடியற்காலத்திலே களிப்புண்டாகும்**'' (சங். 30 : 5). பொருத்தமானதும் நம்பிக்கை கொடுக்கக் கூடியதும் பிணக்கில்லாததுமான வார்த்தையையே – நித்திரையையே – அப்போஸ்தலர் அடிக்கடி மரண நிலைமைக்கு ஒப்பிடுகிறார்கள். இவ்விதமாக, முதல் இரத்தசாட்சியாகிய ஸ்தேவானைப் பற்றி ''**நித்திரை அடைந்தான்**'' என்று லூக்காவும் (அப். 7 : 60), ''**தாவீது ... நித்திரை அடைந்தான்**'' என்று பவுலும் (அப். 13 : 36), ''**பிதாக்கள் நித்திரை அடைந்தார்கள்**'' என்று பேதுருவும் (2 பேது. 3 : 4), அவ்வார்த்தையை உபயோகிக்கிறார்கள். பவுல் அவ்வார்த்தையை அநேக இடங்களில் உபயோகித்திருக்கிறார்:–

''**அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள்: சிலர் மாத்திரம் நித்திரை அடைந்தார்கள்**'' (1 கொரி. 15 : 6).

''மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் ... கிறிஸ்துவுக்குள் **நித்திரை அடைந்தவர்களும்** கெட்டிருப்பார்களே (அழிந்திருப்பார்களே)'' (1 கொரி. 15 : 13, 18).

''கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து **நித்திரை அடைந்தவர் களில்** முதற்பலனானார்'' (1 கொரி. 15 : 20).

''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கி றேன் நாமெல்லாரும் **நித்திரையடைவதில்லை**'' (1 கொரி. 15 : 51).

''சகோதரரே **நித்திரை அடைந்தவர்களினிமித்தம்** நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்து அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை'' (1 தெச. 4 : 13).

''இயேசுவுக்குள் **நித்திரையடைந்தவர்களையும்** தேவன் அவரோடே கூட (அவராலே மரித்தோரிலிருந்து) கொண்டு வருவார்'' (1 தெச. 4 : 14).

இராஜ்யம் .... உயிர்த்தெழுதலின் காலம் ... வருகிறபொழுது, ''கர்த்தருடைய வந்திருத்தல் (வருகை என்பது தப்பிதமான மொழிபெயர்ப்பு) மட்டும் உயிரோடிருக்கும் நாம் **நித்திரையடைந்தவர்களுக்கு** முந்திக்கொள்வதில்லை'' (1 தெச. 4 : 15).

''அவரிடத்தில் (கிறிஸ்துவிடம்) ஒப்புக்கொடுத்ததை அவர் (கிறிஸ்து) அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராய் இருக்கிறாரென்று நிச்சயித்து'' (2 தீமோ. 1 : 12) ஆயிரவருஷ நாளாகிய கிறிஸ்துவின் நாள் என்று சொல்லப்படுகிற கர்த்தருடைய நாளை முன்னோக்கினவர்களாய் சமாதானத் தோடே ''**அவர்கள் நித்திரையடைந்தார்கள்.**'' ''உயிர்த்தெழுதலின் சுவிசேஷத்தை தேவன் முதலாவது ஆபிரகாமுக்குப் போதித்த காலமுதற்கொண்டு பழைய ஏற்பாடு முழுவதும் இதே கருத்துக்கொண்டு பேசுகிறது. ''**அவன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்**'' என்ற வாசகம் பழைய ஏற்பாட்டில் பலமுறை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யோபு இவ்விஷயத்தை மகாபெலமான பாஷை நடையில் வற்புறுத்திப் பேசுகிறார்:– ''**நீர் என்னைப் பாதாளத்தில்** (ஷியோலில் – மரண நிலையில் – பிரேதக்குழியில்) **ஒளித்து உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து என்னைத் திரும்ப நினைக்கும் படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்**'' (யோபு. 14 : 13)

மரணம் சம்பவித்துக் கொண்டிருக்கிற தற்காலமே தேவனுடைய கோபத்தின் காலமாயிருக்கிறது; ஏனென்றால் ஆதியான மீறுதலினிமித்தம் மரணசாபம் எல்லார் மேலும் இருக்கிறது. எனினும், ஏற்றக்காலத்தில் சாபமானது நீக்கப்பட்டு பூமியிலுள்ள சகல வம்சங்களுக்கும் மீட்பராகிய கிறிஸ்து மூலமாய் ஆசீர்வாதம் வருமென்று நமக்கு வாக்குத்தத்தம் உண்டாயிருக்கிறது; ஆகவே யோபு எனக்கு மாறுதல் எப்போதுவருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன் (அப்புறம்) என்னைக் கூப்பிடும் (யோவா. 5 : 25), நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளில் கிரியையின்மேல் பிரியம் வைப்பீராக என்று சொல்லுகிறார் (யோபு 14:13-15). மேலும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள நாம் நமது கர்த்தருடைய மறுமொழியை யோவா. 5 : 28, 29-ல் வாசிக்கிறோம். பிரேதக் குழிகளிலுள்ள யாவரும் மனுஷ குமாரனுடைய சத்தத்தைக் கேட்பார்கள். அவர்களெல்லாரும் விழித்தெழும்பி தேவனை அறியும் பூரணமான அறிவை அடையவும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கேதுவான பூரணமான சந்தர்ப்பத்தை அடையவும் அழைக்கப்படுவார்கள்.

## மெழுகுவர்த்தி ஓர் திருஷ்டாந்தம்

குழப்பமற்றதும் எல்லாரும் நன்றாய் அறியக் கூடியதுமான ஒரு பொருளைக் கொண்டு மானிட மற்றும் மிருக சரீரத்தையும் ஆத்துமாவையும் ஆவியையும் திருஷ்டாந்தப் படுத்திக் (விளக்கிக்) காட்டுவோம். ஒரு மெழுகுவர்த்தி உயிரில்லாத மானிட சரீரத்துக்கு அதாவது ஓர் பிரேதத்திற்கு ஒப்பானதும் மெழுகுவர்த்தியைக் கொழுத்துவது சிருஷ்டிகரால் ஆதியில் கொடுக்கப்பட்ட ஜீவ சுடருக்கு ஒப்பானதாகும். ஜுவாலையாகிய வெளிச்சம் ஞானேந்திரிய ஜீவியாகிய உணர்ச்சியுள்ள ஆளுக்கு (நபருக்கு) – ஆத்தும இலட்சணத்துக்கு – யுக்தி அறிவுக்கு ஒப்பானதாகிறது. ஜுவாலைக்கு ஆதரவாக மெழுகுவர்த்தியின் கரியோடு பொருந்துகிற (சேருகிற) பிராணவாயு கொண்ட ஆகாயமானது (காற்றானது) ஆத்துமாவை அதாவது உணர்ச்சி அறிவோடு கூடிய ஆளை உண்டாக்கத்தக்கதாக சரீரத்தோடு சேருகிற ஜீவசுவாசத்துக்கு (ஜீவ ஆவிக்கு) ஒப்பானதாகும். மெழுகுவர்த்தியை அழிக்கக்கூடிய ஓர் அபாயம் நேரிடுமானால் ஜுவாலையானது மெய்யாகவே ஒழிந்துபோய் விடுகிறது. அதே மாதிரியாகவே மானிட அல்லது மிருகசரீரமானது ஓர் ஆபத்துக்கு அல்லது நாசத்துக்கு உட்பட்டு அழிக்கப்படுமேயாயின் ஆத்துமா (ஜீவன், அறிவு, உணர்வு) ஒழிந்து போய்விடுகிறது.

அல்லது தீயணைக்கும் கருவியினாலோ அல்லது தண்ணீருக்குள் மெழுகுவர்த்தியை அமிழ்த்தியாவது எரிகிற மெழுகுவர்த்தியின் ஜுவாலையினின்று ஆகாயப் போக்குவரவு அதாவது காற்று போக்குவரவு விலக்கப்பட்டால், மெழுகுவர்த்தி யானது சேதமடையாமல் இருந்த போதிலும், தீபம் (வெளிச்சம்) அணைந்து போகும்; அப்படியே ஒரு மனுஷனைத் தண்ணீருக்குள் அமுத்தியோ, விஷ வாயு ஊட்டியோ சுவாசிக்க முடியாதபடி செய்து ஜீவசுவாசம் விலக்கப்பட்டால் ஆத்துமா – ஜீவன் – உயிரோடிருத்தல் – ஒழிந்து போய்விடும்; சரீரமோ சேதமடையாமல் தங்கியிருக்கும். அனுகூலமான நிலைமை களிருந்தால் எரிகிற மெழுகுவர்த்தியைக் கொண்டு மற்ற மெழுகுவர்த்திகளையும் கொளுத்தலாம். ஆனால் அணைக்கப் பட்ட மெழுகுவர்த்தியானது தன்னைத்தானே மறுபடியும் பற்றவைத்துக்கொள்ளவோ அல்லது அதைக்கொண்டு மற்ற மெழுகுவர்த்திகளைப் பற்றவைக்கவோ முடியாது. அப்படியே

மானிட சரீரமும் உயிரோடிருக்கையில் ஜீவாத்துமாவாய் இருக்கிறபடியால் அது தேவ ஏற்பாட்டின்படி மற்ற ஆத்துமாக்களை (ஆட்களை) ஜெனிப்பித்துப் பிறப்பிக்கக்கூடும்; ஆனால் ஜீவசுடர் ஜீவசக்தி எடுபட்டதும் ஆத்துமா அழிந்து போவதுடன் நினைக்கவும் உணர்வும் ஜெனிப்பிக்கவும் கூடிய எல்லா சக்திகளும் நின்று போய்விடுகிறது.

இக்கருத்துக்கு இசைவாகவே யாக்கோபுக்குப் பிறந்த பிள்ளைகளைப்பற்றி யாத். 1 : 5-ல் வாசிக்கிறோம். இவ்வாக்கியம் இங்கிலீஷ் பைபிளில் மிகவும் தெளிவாக உள்ளது – "All the souls that came out of the Loins of Jacob were seventy souls"- "**யாக்கோபின் இடுப்பிலிருந்து தோன்றி வந்த ஆத்துமாக்களெல்லாம் எழுபது ஆத்துமாக்களே.**" யாக்கோபு தனது ஜீவசுடரையும் சரீரக்கட்டையும் அதாவது இவை ஒன்றித்ததினால் உண்டான தனது ஆத்துமா என்ற யுக்தி அறிவுள்ள ஆள்தத்துவத்தை ஈசாக்கிடமிருந்து பெற்றான்; ஈசாக்கு அவைகளை ஆதாம் வழியாகப் பெற்றான்; ஆதாமுக்கு மாத்திரமே தேவன் நேரடியாக ஜீவனைக் கொடுத்தார். யாக்கோபு ஜீவனையும் சரீரக் கட்டையும் ஆத்துமாவையும் தனது சந்ததிக்குக் கொடுத்தான். அப்படியே மற்றெல்லா மனுஷர்களுக்குள்ளும் இது நடைபெற்று வருகிறது.

ஓர் மெழுகுவர்த்தியைப் பற்றவைக்கத் திறமையுள்ள எவரும் அணைக்கப்பட்டுப்போகும் மெழுகுவர்த்தியைத் திரும்பவும் பற்றவைக்கலாம். ஆனால் தேவ ஏற்பாட்டின்படி ஜீவசுடரை (ஜீவ சக்தியை) இழந்துபோன மானிட சரீரமானது "**அழிந்து போகிறது**". "**அது எடுக்கப்பட்ட மண்ணுக்குத் திரும்புகிறது**". ஜீவசுடரோ (ஜீவசக்தியோ) தேவ வல்லமையினாலாகிய ஓர் அற்புதச் செயலால் அன்றி வேறு எவ்விதத்தினாலும் திரும்பவும் ஏற்படமுடியாது. ஆகவே உயிர்த்தெழுதலைப் பற்றிய வாக்குத் தத்தமானது உயிரோடிருத்தலை அல்லது ஆத்துமாவைத் திரும்ப உயிர்நிலைக்குக் கொண்டு வரப்படுவதைப்பற்றிய வாக்குத் தத்தமாகும்; மேலும் ஓர் சரீரமும், திரும்பக்கொடுக்கப்படும் ஜீவசக்தியும் (ஜீவ ஆவியும்) இல்லாமல் ஆள் அல்லது ஆத்துமா இருக்க முடியாததாகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதல் அல்லது ஆத்துமாவை அல்லது ஆளை திரும்ப உயிர்ப்பிக்குதல் (முந்தின நிலைமையை அடையச் செய்தல்) என்பது ஆளுக்கு அல்லது ஆத்துமாவுக்கு புதிய சரீரங்கள் (புதிய சரீரக்கட்டுகள்) அளிக்கப்படும் என்ற கருத்தைக் கொடுக்கிறது. இவ்விதமாக, மண்ணுக்குத் திரும்புகிற அதே மானிட சரீரங்கள் திரும்பவும் கொடுக்கப்படாமல் தேவன் தமக்குச் சித்தமானபடியே உயிர்த்தெழுதலில் புதிய சரீரங்களைக் கொடுப்பாரென வேத வாக்கியங்கள் நமக்கு நிச்சயப்படுத்திக் காட்டுகின்றன. (1 கொரி. 15 : 37-40)

மானிட அல்லது மாம்ச இனத்திற்குப் பதிலாக ஆவிக்குரிய புது இனத்தை அடையப் பாத்திரவான்களாக எண்ணப்படும் ஓர் விசேஷித்த வகுப்பார் உண்டு என்று அப்போஸ்தலன் இவ்விடத்தில் அறிவிக்கிறார்; இந்தப் பெரிய இனமாறுதல், நாம் எதிர்பார்க்கவேண்டியபடி, ஓர் வித்தியாசமான வகையான சரீரம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதினால் ஏற்படுமென்று அவர் விளக்கிச் சொல்லுகிறார். மறுபடியும் மெழுகுவர்த்தியைக் கொண்டே இதை நாம் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுவோம். மாம்ச அல்லது மானிட இனம், கொழுப்பினால் செய்யப்படும். மெழுகுவர்த்தியினால் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டப்படுமாயின் அதிலும் மேலான பிரகாசத்தைக் கொடுக்கக்கூடிய ஓர் உயர்வான மெழுகுவர்த்தியினால் அல்லது காந்த வெளிச்சம் கொடுக்கும் கருவியினால் ஆவிக்குரிய சரீரமாகிய புதிய சரீரம் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டப்படலாம்.

உயிர்த்தெழுதலைப் பற்றி உறுதிகூறுகிற நமது சிருஷ்டிகருக்குரிய ஞானத்திற்கும் வல்லமைக்கும் குறைவான எந்த வல்லமையும், ஞானமும், உயிரடையச் செய்யும் செயலில் அபூரணத்தை உண்டாக்கி மரணமடையுமுன் இருந்த சாயலையும் இனமறிதலையும், ஆளறிவையும் விவேகத்தையும் உணர்வையும் போக்கடித்துவிடுமென்று நாம் பயப்படக்கூடியது நியாயமேயாகும். விசேஷமாக முதலாம் உயிர்தெழுதலில் பங்கடைந்து ஆவி ஜீவிகளாகப் பெரிய இனமாறுதலை அடைகிறவர்களின் சம்பந்தமாய் இந்தப்பயம் ஏற்பட ஏதுவுண்டு. ஆனால் இந்த விஷயத்தில் மாத்திரமல்ல, மற்றெல்லா விஷயங்களிலும் நமக்குள்ளே கிரியை நடப்பிக்கிறவரும் நடப்பிக்கப்போகிறவருமான நமது பிதாவாகிய தேவன்மேல் நாம் நமது முழு நம்பிக்கையையும் வைக்கக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம். முற்கால ஜீவியத்தில் நாம் அடைந்த அருமையான போதனைகளிலோ அனுபவங்களிலோ எதுவும் ஒழிந்து போகாதபடிக்கு, நமது இருதயங்களின் எண்ணங்களை அறிகிறவர், அவைகளைப் புதிதான மூளைகளில் மறுபடியும் தோன்றச் செய்யக்கூடுமென்பதை நாம் திட்டமாய் அறிவோமாக, அவர் எவ்வளவேனும் தப்பிதத்திற்குள்ளாகாதபடி மகா ஞானமுள்ளவராயும் அவர் சிறிதளவு கூட இரக்கமற்றவர் என்று சொல்லப்படக்கூடாதபடி மகாநல்லவராயும் இருக்கிறார். நாம் கேட்டுக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் மகா மேலான அளவாய் அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லா காரியங்களையும் பூரணமாக நிறைவேற்றுவார்.

## சரீரமும் ஆத்துமாவும் ஆவியும்

சபையாகிய பரிசுத்தவான்களை மொத்தமாய் ஒரே தொகுதியாகப் பாவித்துப் பேசும்பொழுது, சரீரம் ஆத்துமா ஆவி முதலிய வார்த்தைகளை உபயோகிக்கலாம். உதாரணமாக உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக என்று அப்போஸ்தலன் ஜெபிக்கிறார். (1தெச. 5 : 23) பரலோகத்தில் பேரெழுதப்பட்டிருக்கிற தெரிந்துகொள்ளப்பட்ட சபை மொத்தமாக ஓர் தொகுதியாகப் பேசப்படுகையில் இந்த மன்றாட்டு சபைக்குப் பிரயோகிக்கத் தக்கதாகும் என அதை அர்த்தப்படுத்தலாம். உண்மையான ஆவி சிறு மந்தையில் காக்கப்பட்டிருக்கிறது. அதை மறைத்து நெருக்கத்தக்கதாகக் களைகள் ஏராளமாய் பெருகியிருந்தாலும் அதின் சரீரமானது பகுத்தறியப்படக் கூடியதாய்ப் பிரத்தியட்சமாயிருக்கிறது. மேலும் அதின் ஆத்துமா அதின் முயற்சி அதின் யுக்தி அறிவு அதின் ஞானேந்திரிய ஆள்தத்துவம் – ஜனங்களுக்குரிய பிரமாணமாகிய சிலுவையின் (மீட்கும் பொருளின்) உபதேசத்தை வெளியரங்கப்படுத்திக்கொண்டு, எங்கும் பிரத்தியட்சமாய் இருந்திருக்கிறது. இவ்வகையினாலன்றி வேறெவ்வகையினாலும் நாம் இதைவிட அதிக நியாயமான கருத்தை பரிசுத்த பவுலின் வார்த்தைகளிலிருந்து அறியமுடியாது வேறெவ்வகையிலும் நாம் பரிசுத்த பவுலின் வார்த்தைகளை (1தெச. 5 : 28-ஐ) பிரயோகிக்க முடியாது; ஏனெனில் எவர்களைப் பற்றி இவ்வார்த்தைகள் பேசப்பட்டதோ அந்த ஜனங்களின் தனித்தனியான ஆவிகளும் ஆத்துமாக்களும் காக்கப்படுவதைக் குறித்து அநேகர் ஒருவருக்கொருவர் வித்தியாசமான கருத்துடையவர்களாயிருந்தாலும் அவர்களுடைய சரீரங்கள் காக்கப்படாமல் மற்றவர்களுடைய சரீரங்களைப்போல் மண்ணுக்குத் திரும்பியிருக்கின்றன என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். அன்றியும் சரீரம் ஆத்துமா ஆவி முதலிய வார்த்தைகள் பன்மையில் உபயோகிக்கப்படாமல் ஒருமையில் உபயோகிக்கப்பட்டிருக்கிறதையும் கவனித்து, நாம் மேலே காட்டியுள்ள கருத்தே வேதபுத்தகத்திற்கும் நியாயத்துக்கும் பொருந்தினதாகும் என அறிந்து கொள்வோமாக.

***

# சில கேள்வி பதில்கள்

மேலே காட்டிய விஷயங்களையெல்லாம் இன்னமும் அதிகமாய் தெளிவுபடுத்திக்காட்டும் சில கேள்விகளையும் வேத வசனத்தின் மூலமாய் அவற்றிற்குக் கொடுக்கப்படும் விடைகளையும் பின் வருமாறு காட்டுகிறோம்.

**கேள்வி :** சுவிசேஷயுகத்துப் பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்கள் பரலோகத்துக் குரியவைகளா? பூலோகத்துக்குரியவைகளா?

**பதில் :** ''மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல வானவருடைய சாயலையும் நாம் அணிந்து கொள்வோம். நாம் பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள்'' (1 கொரி. 15 : 49; 2 தீமோ. 4 : 18; எபி. 3 : 16 : 4; பிலி. 3 : 14; எபே. 2 : 6; 2 தெச. 1 : 11, 12; 2 தீமோ. 1 : 9, 10).

**கேள்வி :** ''ஜெயம் பெறுகிறவர்கள்'' என்றும், பரிசுத்த வான்கள் என்றும் அழைக்கப்படும் தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது. ''பூமியிலிருந்து உண்டான மண்ணானவர்களாக'' அதாவது மானிடர்களாகவே மறுமையில் இருக்க வேண்டியவர்களா?

**பதில் :** நாம் வாக்குத்தத்தங்களின் மூலமாய் ''தெய்வீக சுபாவத்துக்குப் (இனத்துக்குப்) பங்குள்ளவர்கள் (புது சிருஷ்டிகள்) ஆகும்பொருட்டு, மகாமேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தங்கள் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன'' (2 பேது. 1 : 4; 2 கொரி. 5 : 17; ரோம. 8 : 17, 18)

**கேள்வி :** ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டபொழுது ஆரம்பிக்கப்பட்ட பரிசுத்தவான்களுடைய மனமாறுதல் எப்பொழுது பூர்த்தியாகும்? அதாவது அவர்களுடைய முழு மாறுதல் ஆவியினால் பிறக்குதல் எப்பொழுது சம்பவிக்கும்? அவர்கள் எப்பொழுது தங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைப் போலாக்கப்படுவார்கள்?

**பதில் :** (பரிசுத்தவான்களாகிய) நாமெல்லாரும் மறுரூப மாக்கப்படுவோம் ... ''மரித்தோர் (பரிசுத்தவான்கள்) அழிவில் லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமெல்லாரும் ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறு ரூபமாக்கப்படுவோம் ... அழிவுள்ளதாகிய இது அழியாமையைத் தரித்துக் கொள்ளும். ஜென்ம (மானிட) சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்'' ''இவ்விதமாக (விசேஷித்த – தெரிந்தெடுக்கப் பட்ட) மரித்தோரின் (பரிசுத்தவான்களின் பிரதானமான, முதலாம்) உயிர்த்தெழுதல் இருக்கும்'' (1 கொரி. 15 : 50-53, 42-44; பிலி. 3 : 10).

## தெரிந்தெடுப்புக்குட்படாதவர்களுக்குரிய நம்பிக்கை

**கேள்வி :** சுவிசேஷயுகத்தில் தெரிந்தெடுக்கப்படும் சபை யைத் தவிர மற்றெல்லா மனுஷருக்கும் கூறப்பட்டிருக்கும் நம்பிக்கை என்ன?

**பதில் :** ''இதுவரைக்கும் சர்வ (மானிட) சிருஷ்டியும் ஏகமாய் தவித்துப் பிரசவித்து வேதனைப்படுகிறது. ஏனென்றால் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது.'' உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகளுடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் திரும்பக் கொடுக்கப் படுங் காலங்கள்'' அப்புறம் வரும். அப்பொழுது ஆபிரகாமின் சந்ததியின் (இயேசுவும் சபையும் சேர்ந்த சந்ததியின் – கலா. 3:16, 29) மூலமாய் பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப் படும்'' ரோம. 8 : 22, 19; அப். 3 : 19-21; கலா. 3 : 16, 29.

**கேள்வி :** மரித்தோர் தன்னறிவோடு இருக்கிறார்களா?

**பதில் :** ''மரித்தோர் ஒன்றும் அறியார்கள்'' பிர. 9 : 5; சங். 146 : 4; ஏசா. 38 : 18, 19.

**கேள்வி :** மரித்துப்போன பரிசுத்தவான்கள் கடந்த காலங்களில் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருக்கிறார்களா?

**பதில் :** ''மரித்தவர்கள் கர்த்தரைத் துதியார்கள்'' சங். 115 : 17; 6 : 5; பிர. 9 : 6.

## பலனளிப்பு – மரணத்திலா? அல்லது உயிர்த்தெழுதலிலா?

**கேள்வி :** ஆசீர்வாதங்களானாலும் (வெகுமதிகளானாலும்) தண்டனைகளானாலும் பூரணமான பிரதிபலன்கள் உயிர்த் தெழுதலுக்கு முன்னமே எதிர்பார்க்கப்பட வேண்டியவைகளா?

**பதில் :** ''நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்'' (லூக். 14 : 14; வெளி. 11 : 18; மத். 16 : 27).

**கேள்வி :** தீர்க்கதரிசிகள் தங்களுக்குரிய பலனை (வெகு மதியை) தங்கள் மரணநேரத்தில் பெற்றுக் கொண்டார்களா? அல்லது நியாயத் தீர்ப்பின் நாளாகிய (யுகமாகிய) ஆயிர வருஷ யுகத்தின் ஆரம்பத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்படும்படி தேவனுடைய ஏற்பாட்டில் கட்டுப்பாடு பண்ணப்பட்டிருக்கிறதா?

**பதில் :** ''மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும் தீர்க்க தரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பலனளிக்கிற தற்குமுரிய காலம்'' ஏழாம் எக்காளமாகிய கடைசி எக்காளம் தொனிக்கையிலேயே (வெளி. 11 : 15, 18; சங். 17 : 15).

**கேள்வி :** அப்போஸ்தலர் மரித்தவுடன் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்காக வாக்குத்தத்தம் பெற்றார்களா? அல்லது தங்கள் வெகுமதியை அடைய இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்தார்களா?

**பதில் :** ''நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக் கூடாதென்றும் நான் யூதரோடு சொன்னது போல இப்பொழுது

உங்களோடும் (அப்போஸ்தலரோடும்) சொல்லுகிறேன்.'' ''நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்'' யோ. 13 : 33; 14 : 3.

**கேள்வி :** கர்த்தரின் இரண்டாம் வருகையில் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் நீங்கலாக சுவிசேஷ யுகத்திலுள்ள மற்ற பரிசுத்தவான்கள் கீரிடம் சூட்டப்படுவது அவர்களுடைய மரண நேரத்திலென்று எதிர்பார்ப்பது முறையாகுமா?

**பதில் :** ''பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது வாடாதா மகிமையுள்ள கிரீடத்தைப் பெறுவீர்கள்'' (1 பேது. 5 : 4; 2 தீமோ. 4 : 8; 1 பேது. 1 : 4, 5).

**கேள்வி :** தாங்கள் எப்பொழுது மகிமையடைவதாக அப்போஸ்தலர் நம்பியிருந்தார்கள்? தங்களுடைய மரண நேரத்தினாலேயா? அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயா?

**பதில் :** ''நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப் படுவீர்கள்.'' (கொலோ. 3 : 4; 1 யோ. 3 : 2)

**கேள்வி :** பரிசுத்தவான்கள் மரண நேரத்தில் 'பிரகாசிக்க' வேண்டியவர்களாயிருந்தார்களா?

**பதில் :** ''பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர் களாகிய அநேகர் ........... விழித்து எழுந்திருப்பார்கள்; ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போல (சூரியனைப் போல) பிரகாசிப்பார்கள்'' (தானி. 12 : 2, 3; மத். 13 : 40-43).

**கேள்வி :** மூப்பராகிய விசுவாசிகள் (பழைய ஏற்பாட்டு விசுவாசிகள்) தங்களுடைய மரண நேரத்தில் பலனளிக்கப் பட்டார்களா?

**பதில் :** ''இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டவைகளை அடையாமல், ......... விசுவாசத்தோடே மரித்தார்கள்.'' ''அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக்கப் படாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.'' (எபி. 11 : 13, 39, 40).

## தாவீது பரலோகத்தில் இல்லை

**கேள்வி :** தாவீது பரிசுத்த தீர்க்கதரிசிகளில் ஒருவராயிருந் தாரே; அவர் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாரா?

**பதில் :** ''தாவீது பரலோகத்திற்கு எழுந்துபோகவில்லை'' (அப். 2 : 34).

**கேள்வி :** நமது கர்த்தரின் பரமேறுதல் மட்டும் பரலோகத் துக்குப் போனவர்கள் எத்தனை பேர்?

**பதில் :** ''பரலோகத்திலிருந்திறங்கினவராகிய மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை.'' (யோ. 3 : 13)

**கேள்வி :** மனுஷனைச் சிருஷ்டித்தவர் அவனை அழிக்கக் கூடுமா? ஆத்துமா அதினுடைய சிருஷ்டிகரால் அழிக்கப் படக்கூடுமா?

**பதில் :** ''ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே (கெஹன்னாவிலே - இரண்டாம் மரணத்திலே) அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.'' ''அவர்களுடைய ஆத்துமாக் களை மரணத்துக்கு விலக்கிக் காக்கவில்லை. பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்'' (மத். 10 : 28; சங். 78 : 50; எசே. 18 : 4, 20; சங். 22 : 29; யோசு. 10 : 3; (நரஜீவன்களையும் - ஆத்துமாக்களையும்): ஏசா. 38 : 17; சங். 56 : 13; 30 : 3; 119 : 175; மத். 26 : 28; ஏசா. 53 : 10, 12).

**கேள்வி :** உயிர்த்தெழுதலின் உபதேசத்துக்கு பவுல் அப்போஸ்தலன் எவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொடுத்துப் பேசினார்?

**பதில் :** ''மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே ... கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே'' (அழிந்து போனார்களே) (கொரி. 15 : 3, 18).

**கேள்வி :** நரகம் என்ற அறியப்படாத ஓர் இடத்திலே அநீதிமான்கள் இப்பொழுது சித்திரவதை அடைந்து கொண்டிருக்கிறார்களா? அல்லது அவர்களுடைய அநீதிக்குச் சரியான முழுத் தண்டனையைத் தற்காலத்திலேயே அனுபவித்து வருகிறார்களா?

**பதில் :** ''கர்த்தர் ......... அக்கிரமக்காரரை ஆக்கினைக் குள்ளானவர்களாக (தண்டிக்கும்படி) நியாயத் தீர்ப்பு நாளுக்கு (ஆயிரவருஷ நாளுக்கு) வைக்கவும் அறிந்திருக்கிறார்'' (2 பேது. 2 : 9; யோபு 21 : 30).

## சீர்திருத்தப்படக் கூடாதவர்களுக்கு அழிவு

**கேள்வி :** பரீட்சிக்கப்படுகிறபொழுது, சீர்திருத்தப்படக் கூடாதவர்களாய் (மனப்பூர்வமாய் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கும் துன்மார்க்கராய்) காணப்படுகிறவர்களின் முடிவு என்ன?

**பதில் :** அவர்கள் ''ஜீவனை அடையாதபடி அறுப்புண்டு போவார்கள்'' நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்; (இந்த அழிவிலிருந்து உயிர்த்தெழுதல் கிடையாது); ஏனென்றால் ஆயிரவருஷ அரசாட்சிக் காலத்திலும் பாவத்தின் சம்பளம் மரணமே (இது இரண்டாம் மரணத்தைக் குறிக்கும்); அப்பொழுதும் தேவனுடைய கிருபை வரமோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மாத்திரம் அடையக்கூடிய நித்திய ஜீவனே. குமாரனையுடையவன் ஜீவனையுடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் அவ்வரத்தைப் பெற்றுக்கொள்ளமாட்டான் (மத். 25 : 45) வெளி. 20 : 14, 15; 2 தெச. 1 : 10; ரோ. 6 : 23; 1 யோவா. 5 : 12).

**கேள்வி :** நரகம் (எபிரேய வார்த்தை Sheol - ஷியோல்) என்பது ஜீவாலித்து எரிகிற அக்கினியுள்ள இடமாகவும், மனுஷரை உயிருடன் வதைக்கிற இடமாகவும், அங்கே மனதிலும் சரீரத்திலும் சித்திரவதையை அனுபவிக்கும் ஜனங்களுடைய கூக்குரல்களும் தூஷனைகளும் சாபமொழிகளும் நிறைந்த பயங்கரமான

இடமாகவும் இருக்குமானால், அது மௌனமும் அந்தகாரமும் மறதியும் உணர்ச்சியின்மையுமுள்ள இடமாகவோ அல்லது நிலைமையாகவோ இருப்பதாக வேத புஸ்தகம் ஏன் உறுதி கூறுகிறது? (யோபு 10 : 21, 22; சங். 88 : 3-12 , 6 : 5; 146, 4; பிர. 9 : 10; ஏசா. 38 : 18)

**கேள்வி :** தேவன் சரீரத்தையும் ஆத்துமாவையும் இரண்டாம் மரணத்தினால் அழித்துப்போட வல்லவராயிருப்பதாலும், சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிற துன்மார்க்கரை அவர் அழித்துப்போடுவதாக அறிவிப்பதாலும், நித்திய வேதனை உண்டு என்றும் சதாகாலமும் பாவம் நிலைத்திருக்குமென்றும் சொல்லுகிற உபதேசங்கள் கள்ளப் போதகங்களென்று தெளிவாய் நிரூபிக்கிறதில்லையா? மேலும் இந்த ஆதாரமானது தேவன் அநீதியுள்ளவரல்ல என்பதை விளங்கப்பண்ணி அவருடைய குணத்தின் பரிசுத்தத்தை வெளியரங்கமாக்குகிறதில்லையா?

**கேள்வி :** நீ கிறிஸ்தவனானது முதற்கொண்டும் அதற்கு முன்னும் உன்னைக் கலங்கப்பண்ணி வந்திருக்கிற எல்லா சந்தேகங்களோடும் மேலேகாட்டிய குறிப்புகள் நெருங்கிய சம்பந்தமுடையவைகளாயிருக்க வில்லையா? மேலும் தேவ ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்ட தேவனுடைய வசனமென வேத புத்தகத்தின் மேல் உனக்குள்ள விசுவாசத்தைப் பெலப்படுத்துவதிலும் நிலைப்படுத்துவதிலும் உறுதிப்படுத்து வதிலும் உன்னிலுள்ள சந்தேகங்களை வேதவாக்கியங்களின் மூலமாய் தீர்த்தறுத்துக்கொண்டதானது, உனக்கு அதிகமாய் உதவி செய்கிறதில்லையா? கள்ளப்போதகங்களால் தங்களில் குழப்பமடைந்து அநேக சந்தேகங்களுக்குட்பட்டு நிலை குலைந்துபோன அநேக கிறஸ்தவர்களுக்கும் இன்னும் அநேக அவிசுவாசிகளுக்கும் இது பாக்கியமான பலனைக் கொடுத் திருக்கிறது. தேவனை உண்மையாய் தேடுகிறவர்கள் அவருடைய ஞானமும் கிருபையுமாகிய பொக்கிஷங்களைக் கண்டடையும்படி அவர்களுக்கு வழிகாட்டுவது வேத புத்தகமே. ***

# பாவத்தின் சம்பளம், வேதனையுடன் கூடிய நித்திய ஜீவனா? அல்லது மரணமா? - எது?

## I. அது வேதனையுடன் கூடிய நித்தியஜீவன் அல்ல.

a. வேதனையுடன் கூடிய நித்தியஜீவனே, பாவத்தின் சம்பளம் என்று வேதபுத்தகம் ஓரிடத்திலும் சொல்லவில்லை; ஏனெனில்:-

b. அது வேதவாக்கியங்களுக்கு விரோதமானது.

c. அது வேத உபதேசங்களுக்கு விரோதமானது.

d. அவ்வித தண்டனையை நிறைவேற்றுவது முடியாத காரியமாதலால், அந்த உபதேசம் தனக்குத்தானே விரோதமானது. அதை ஒரு கொள்கையென்று சொல்வது தகாதது.

e. அது பரிபூரண ஞானம் வல்லமை நீதி அன்பு முதலியவை நிறைந்த தேவ குணாதிசயத்துக்கு விரோதமானது.

f. அது கிறிஸ்துவின் மீட்கும் பொருளாகிய பிரதிக்கிரை ய த்துக்கு விரோதமானது. பிரதிக் கிரையம் (சரிக்குச்சரி செலுத்துவது) மரணத்தினாலே ஒப்புவிக்கப் பட்டதேயன்றி, நித்தியவேதனையினால் அல்ல.

g. அது தெளிந்த மனதுள்ளவர்களுடைய புத்திக்கு விரோதமானது. ஏனெனில் அக்கொள்கையை ஆதரிக்கிறவர்களை அது நியாயமற்றவர்களாக்கி மதிகேடடையச் செய்கிறது.

h. அது அனுபவத்துக்கு எதிரிடையானது; நித்தியவேதனையல்ல, வேறொருதண்டனையே பாவத்தின் சம்பளமாக விதிக்கப்படுகிறதென்று அனுபவமே காண்பிக்கிறது.

i. அது தேவ பக்திக்கு விரோமானது, ஏனெனில் அது மெய்யான விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அன்பையும் கெடுத்து, பயங்கரத்தையும் அவி சுவாசத்தையும் அவநம்பிக்கையையும் இருதயக் கடினத்தையும் பரவச்செய்கிறது.

j. அது பகுத்தறிவுக்கும் நியாயத்துக்கும் விரோதமானது. எப்படியெனில் சரியான நியாயங்கொண்ட இயல்பான அறிவே அப்பேர்ப்பட்ட தண்டனையை அருவருக்கிறது.

k. அது பாவம் ஒழிந்துபோம் என்ற கொள்கைக்கு விரோதமானது.

l. அது பொல்லாப்பு ஒழிந்துபோம் என்ற கொள்கைக்கு விரோதமானது.

m. அது நித்திய ஜீவன் ஓர் கிருபைவரம் என்ற கொள்கைக்கு விரோதமானது.

n. அது ஓர் அஞ்ஞானக் கொள்கை; பிறசமயக் கொள்கை.

o. அது சாத்தானும் விழுந்துபோன தூதர்களும் உண்டு பண்ணின போதனை.

p. அது, கர்த்தருடைய ஆவியால் அல்லாமல் எதிராளி யாகிய சாத்தானுடைய ஆவியால் நிரப்பப்பட்ட மனிஷர்களால், ஜனங்களை உபத்திரவப்படுத்துவதற்கு ஓர் தூண்டுகோலாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

q. அது குருக்களின் தந்திரம் (உபாயங்கள்) பலிக்கும்படி உபயோகிக்கப்படும் ஓர் கருவியாயிருக்கிறது. (அது ஜனங்களை பயமுறுத்தி ஏமாற்றும்படி குருக்கள் கையாளும் ஓர் கருவியாகும்.)

r. அது பாவத்திற்குரிய உண்மையான தண்டனைக்கு எதிரிடையாக ஏற்பட்ட பாப்புமதக் கபடவேலையாகும்.

s. அது மானிட ஆத்துமாவின் அமைப்பையும் தன்மையையும் பற்றியுண்டான தப்பபிப்பிராயத்திற்கு அடிப்படை.

t. அது நரகத்தைப் பற்றி உண்டான தப்பபிப்பிராயத்திற்கு அடிப்படை.

u. அது நித்திய ஜீவனைப் பற்றியுண்டான தப்பபிப் பிராயத்திற்கு அடிப்படை (துப்பபிப்பிராயத்தின் பயனாக ஏற்பட்ட கொள்கை)

v. அது ஜீவன் மரணம் ஆகியவற்றிற்குப் பிற்பாடுள்ள விஷயங்களைப் பற்றியுண்டான தப்பபிப்பிராயத்திற்கு அடிப்படை.

w. அது தப்பான வியாக்கியான முறைகளுக்கு அடிப்படை.

x. அது தவறான மொழி பெயர்ப்புகளால் ஆதரிக்கப் படுகிறது.

y. அது உலகத்தில் சொல்லப்பட்ட முதல் பொய்யின் உட்கருத்தாகும்.

z. அதை வேத புத்தகத்தின் உபதேசமென்று நம்புவது மிகச்சிறந்த விவேகமுள்ள ஜனங்களில் சிலரை விசுவாசிகளாக்கியிருக்கிறது. தேவன் இல்லையென்று சாதிக்கச் செய்திருக்கிறது. கிறிஸ்தவர்களென்போரில் படிப்பாளிகளான சிலர் தேவன்மேல் விசுவாசமற்றவர் களாகிறதற்குக் காரணமாயிருப்பது இயல்பான அறிவுக்கும் தேவனுடைய குணத்துக்கும் பொருந்தாத இந்த நித்திய நரக வேதனையின் உபதேசமே ஆகும்.

***

# பாவத்தின் சம்பளம் மரணமே

**A. அதின் நிரூபணம்**

1. தெளிவான வாக்கியங்கள்: ஆதி. 2 : 17; எரே. 31 : 30; ரோ. 1 : 32, 5 : 2, 15; 17 : 6 – 16, 21, 23; 7 : 5; 1 கொரி. 15 : 21, 22, 56; யாக். 1 : 15; 1 யோ. 5 : 16.
2. இணை வாக்கியங்கள் : ஆதி. 3 : 19; ரோ. 1 : 18; 5 : 16; 18, 19.

**B. அதின் தன்மை**

1. ஜீவன் அல்ல: உபா. 30 : 15, 19; ரோ. 5 : 21; 6 : 28; 8 : 13; கலா. 6 : 8.
2. ஆனால் நிர்மூலம் (அடியோடு அழிந்து போகுதல்)
   a. இல்லாமற் போகுதல்: யோபு 6 : 15, 18; 7 : 9; சங். 37 : 10, 35, 36; 49 : 12; 104 : 35.
   b. அழிவு : யோபு 4 : 9; சங். 9 : 5; சங். 37 : 38; சங். 73 : 27; 145 : 20; நீதி.11 : 10; 1 கொரி. 3: 17; (கெடுப்பார் – அழிப்பார்); பிலி. 3 : 19, 2 தெச. 1 : 10; 1 தீமோ. 6 : 9, 2 பேது. 2 : 1, 12; 3 : 16 (கேடு – அழிவு)
   c. நிர்மூலமாகுதல்: யோபு 4 : 9; சங். 104 : 35; ஏசா. 1 : 28 .
   d. பட்சிக்கப்படுதல்; ஏசா. 1 : 20; எபி. 10 : 26-28; எபி. 12 : 29.
   e. மடிந்துபோகுதல்: மத். 8 : 25, 32; லூக். 13 : 33; யோவா. 3 : 16 (கெட்டுப்போகாமல் – மடிந்து போகாமல் – அழிந்து போகாமல்); லூக். 11 : 50 (கொலையுண்ட – மடிந்துபோன)
   f. அறுப்புண்டு போகுதல்: சங். 37 : 9, 22, 34, 38.

**C. அதன் விளைவு: ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் அழிவு.**

1. ஆத்துமா சாகிறது; யோபு. 36 : 14 அவர்களுடைய ஆத்துமா மாண்டுபோகிறது. (ஆங்கில வேதாகம மார்ஜின் பார்க்கவும்) : சங். 56 : 13; 78 : 50, 116 : 8; எசேக். 18 : 4, 20; யாக். 5 : 20.
2. மரித்துப்போன ஆத்துமா உயிரோடிருக்கிறதில்லை; சங். 22 : 29; 30 : 3; 33 : 18, 19; ஏசா. 55 : 3; எசேக். 13 : 19, 18 ; 27.
3. மரித்துப்போன ஆத்துமாத இல்லாமல் போகிறது: சங். 49 : 9.
4. பொல்லாத ஆத்துமா அழிக்கப்படுகிறது : சங். 35 : 17; சங். 40 : 14. (என் ஆத்துமாவை அழிக்க...); நீதி. 6 : 32; எசேக். 22 : 27; மத். 10 : 28; அப். 3 : 23 (ஆங்கில வேதாகமம் காண்க; யாக். 1 : 21)
5. பொல்லாத ஆத்துமா நாசமாக்கப்படுகிறது: ஏசா. 10 : 18 (Shall consume - both soul and body ஆங்கில வேதாகமம் காண்க.)

6. பொல்லாத ஆத்துமா பட்சிக்கப்படுகிறது: எசேக். 22 : 25

7. பொல்லாத ஆத்துமா மாய்ந்து போகிறது ; மத். 16 : 25, 26. (ஜீவன் என்ற பதம் கிரேக்க பாஷையின்படி ஆத்துமா என்றிருக்க வேண்டும்).

8. பொல்லாத ஆத்துமா அறுப்புண்டு போகிறது. லேவி. 22 : 3; எண். 15 : 30.

**D. அதின் இசைவு**

1. வேத புத்தகம் முழுவதும் அப்படியே கூறுகிறது.
2. பாவத்தின் சம்பளம் மரணம் என்பது அதைப்பற்றிய எல்லா வேதவாக்கியங்களுக்கும் இசைந்திருக்கிறது.
3. அது எல்லா வேத உபதேசங்களுக்கும் இசைந் திருக்கிறது.
4. இத்தண்டனை விதிக்கப்படக்கூடியதாகையால் அது தன்னில் தானே இசைவுள்ளதாயிருக்கிறது.
5. அது தேவ குணாதிசயத்திற்கு இசைந்திருக்கிறது.
6. அது கிறிஸ்துவின் மரணமாகிய அவரது ஈடு பலிக்கு இசைந்திருக்கிறது. (அதாவது மீட்கும் பொருளின் உபதேசத்துக்கு இசைந்திருக்கிறது.)
7. அது தெளிந்த மனதுக்கு (அறிவுக்கு) இசைந்திருக்கிறது.
8. அது அனுபவத்துக்கும் நாம் கவனிப்பதற்கும் இசைந் திருக்கிறது.
9. அது தேவ பக்திக்கு இசைவானது.
10. அது நியாயத்துக்கும் பகுத்தறிவுக்கும் இசைவானது.
11. அது பாவம் ஒழிந்து போய்விடுமென்ற உபதேசத்துக்கு இசைவானது.
12. அது பொல்லாப்பு ஒழிந்துபோகுமென்ற உபதேசத்துக்கு இசைவானது.
13. அது ஜீவன் ஓர் கிருபைவரம் என்ற உபதேசத்துக்கு இசைவானது.
14. பாவத்தின் சம்பளம் மரணமே என்பது இருண்ட யுகங்களுக்குமுன் தேவனுடைய ஜனங்களின் கோட்பாடாயிருந்தது.
15. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதே தேவனும் அவருடைய ஊழியக்காரரும் போதித்த போதனை.
16. அது மார்க்க சுயாதீனத்துக்கும் சுதந்திரத்துக்கும் இடம் கொடுக்கிறது.
17. அது நீதி ஸ்தலத்தின் சமத்துவத்துக்கும் நிரூபணம்.
18. மரணமே பாவத்திற்குரிய தண்டனையென கிறிஸ்து போதித்தார்.
19. அது ஆத்துமாவின் உண்மையான தன்மைக்கு அடிப்படை.
20. அது வேத புத்தகம் போதிக்கிற நரகத்துக்கு இசைந்தது.
21. அது நித்திய ஜீவனைப்பற்றிய உண்மையான அபிப்பிராயத்துக்கு அடிப்படையாகும்.
22. அது வருங்கால வாழ்வின் உண்மையான அபிப்பிராயத்துக்கு அடிப்படையாகும்.
23. அது உண்மையான வியாக்கியான முறைகளுக்கு அடிப்படையாகும்.
24. அது திருத்தமான மொழிபெயர்ப்புகளால் ஆதரிக்கப் படுகிறது.
25. அது தேவனால் நம் மனுக்குலத்துக்குப் போதிக்கப்பட்ட முதல் உபதேசம்.
26. அதை வேத புத்தகத்தின் உபதேசமென்று நம்புவது, அவிசுவாசிகளை, அதாவது தேவன் இல்லையென்று சொல்லுகிறவர்களை மனந்திரும்பப் பண்ணியிருக்கிறது.

***

Visit us at : **www.biblestandardindia.com**

## LHMM கன்வென்ஷன் – 2011

**இடம்: நாசரேத்**

**அக்டோபர் 21, 22, 23**

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். சங். 133.**

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY